# மஞ்சளை சேமித்து விற்கவும்

உலகளவில், மஞ்சள் உற்பத்தியில் இந்தியா 80 சதவீதம் முக்கிய பங்களிக்கிறது. இந்திய நறுமணப் பொருட்கள் வாரியத்தின் முன்கூட்டிய மதிப்பின் படி 2015 -16 ஆம் ஆண்டில் இந்தியாவில் மஞ்சள் 1.84 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 8.3 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. நாட்டின் மஞ்சள் உற்பத்தியில் தெலுங்கானா 2.16 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்து முதல் நிலையிலும், தொடர்ந்து ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் ஈரோடு, சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மஞ்சள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திய நறுமணப் பொருட்கள் வாரியத்தின்படி, 2014 -15 ஆம் ஆண்டின் மஞ்சள் இருப்பு 3.8 இலட்சம் டன்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின், மொத்த மஞ்சள் உற்பத்தியில் 80-85 சதவீதம் உள்நாட்டு நுகர்வுக்கும், மீத உற்பத்தி ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படுகிறது. கர்நாடகாவில் விளையும் மஞ்சள் கர்குர்மின் பிரித்தலுக்காக நேரடியாக கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. ஐக்கிய அரபு நாடுகள் ஜப்பான், ஈரான், மலேசியா, ஐக்கிய அரசு நாடுகள் மற்றும் அமெரிக்காவிற்கு இந்தியாவிலிருந்து மஞ்சள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்கு நல்ல தேவையிருப்பதால், தற்போதையை இருப்பு 2 இலட்சம் டன்களுக்கு கீழே குறைய வாய்ப்புள்ளது.

மஞ்சள் உற்பத்தியானது சென்ற வருடத்தை விட தெலுங்கானாவில் 12 சதவீதம், கர்நாடகாவில் 4 சதவீதம் மற்றும் தமிழ்நாட்டில் 58 சதவீதமும் நடப்பாண்டில் குறைந்துள்ளது. நீண்ட கால வறட்சியின் காரணமாக ஆந்திரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் பயிர்கள் சேதமடைந்துள்ளது. நடப்பாண்டில் நல்ல தரமான மஞ்சளுக்கு ஏற்றுமதி தேவை அதிகமாக இருக்கும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மஞ்சள் விலையை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை

மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான மஞ்சளின் பண்ணை விலை மே - ஜீன், 2016 மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.10,500 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி மஞ்சளை சேமித்து விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள்
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் 0422-6611284
தொலைநகல் - 0422-2430781
மின்அஞ்சல் spices@tnau.ac.in